# தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
## Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**11 வயதுப்பிரிவு**
(01.01.2006 – 31.12.2006 வரையில் பிறந்தோர்)

## தியாக தீபம் திலீபன் மாமா

ஊரெழு மண்தந்த உன்னத அகிம்சைப் புரட்சியாளன் எங்கள் திலீபன் மாமா. இவரது இயற்பெயர் இராசையா பார்த்தீபன் என்பதாகும். உயிரினும் மேலானது எமது உரிமை என்று தலைவர் மாமாவின் வழியில் தடம் பதித்தவர். யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீட மாணவராகத் தகுதிபெற்றவர். ஆனாலும் தாயகத்தின் இன்றிமையாப் போர்ச் சூழலைக் கருத்தில் கொண்டு, தனது கற்கை நெறியைத் துறந்தார். தமிழீழ விடுதலைப் போராளியாகத் தன்னை வரித்துக் கொண்டார்.

இலங்கை இராணுவத்துடனான பல சமர்க்களங்களில் திறம்படச் செயற்பட்டவர். வயிற்றிலும் கையிலும் விழுப்புண் ஏந்திய போதும் அவரது விடுதலையின் வீச்சுக் குறையவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராகக் கடமை ஏற்ற திலீபன் மாமா மக்களால் பெரிதும் மதிக்கப் பெற்றார்.

எங்கெல்லாம் அவரின் குரல் முழங்கியதோ, அங்கெல்லாம் மக்கள் கூட்டம் அலைமோதியது.

“மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்” என்ற விடுதலை வாசகத்தை உரக்கக்கூறி விடுதலைக்கு வலுச் சேர்த்தார் எங்கள் மாமா.

‘அமைதி காக்கும் படை’ என்ற பெயரில் வந்திறங்கிய இந்தியப் படையினால் எமது மக்களின் வாழ்வு சிதைபட்ட வேளை அதனைத் தடுத்து நிறுத்த அகிம்சை வழியைத் தேர்ந்தெடுத்தார் திலீபன் மாமா.

தன் பசி மறந்து, தாகம் துறந்து உண்ணா நோன்பிருந்தார். இந்திய அரசை நோக்கி ஐந்து அம்சக்கோரிக்கையை முன்வைத்து, நீதி வேண்டி சாகும் வரையிலான அகிம்சைப் போரினை முன்னெடுத்தார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து ஏழாம் ஆண்டு செப்ரம்பர் திங்கள் பதினைந்தாம் நாள் யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் கோவில் முன்றலில் அவரின் உயிர் வேள்வி ஆரம்பமானது.

அகிம்சைப் போராட்டத்திற்கு அறியப்பட்ட பாரத தேசம் பாராமுகமாய் நின்றது. எடுத்த இலட்சியத்தில் உறுதி தளராத திலீபன் மாமா, நாளாந்தம் தன்னை உருக்கிக் கொண்டிருந்தார். அவரின் முன்னே திரண்டிருந்த மக்களின் அழுகுரல் வானை முட்டியது. தனது சோர்வையும் பொருட்படுத்தாது மக்கள் முன்னிலையில் அவர் உரையாற்றினார்.

“மலரும் தமிழீழத்தை விண்ணிலிருந்து 650 மாவீரர்களுடன் சேர்த்து 651வது ஆளாக நானும் பார்த்து மகிழ்வேன்” என அவர் உதிர்த்த வார்த்தைகள் உருகும் உயிரின் சபதமாக வெளிப்பட்டு நிற்கின்றது. இது, இலட்சியம் வெல்லும் வரை நாம் போராடுவோம் என்று எம்மீது அவர் வைத்த நம்பிக்கையை வெளிப்படுத்தி நிற்கிறது.

பன்னிரு நாள்களாக எமக்காக அவர் இயற்றிய தவம், வையகத்தில் எவராலும் நிகழ்த்தி இருக்காத ஈகம். வயிற்றில் சுமந்த தீயில் தன்னையே எரித்துத் தமிழீழ விடுதலைப்பாதைக்கு ஒளிதந்து நிற்கும் தியாக தீபம் எங்கள் திலீபன் மாமா. மக்கள் எழுச்சியே விடுதலையை வென்றெடுக்கும் என்ற நம்பிக்கையுடன் விண்ணேகிய திலீபன் மாமாவின் கனவு பலிக்கும். அதற்காக நாம் உழைப்போம். சுதந்திர தமிழீழம் நிச்சயம் மலரும்.

நன்றி,
வணக்கம்.